# ஆளுநர் பதவி வகிக்கத் தகுதியற்றவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!... முதல்பக்கத்தொடர்ச்சி

முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் தங்களது உறுதியான ஆதரவை வழங்கி தேர்ந்தெடுத்துள்ளதை இந்தியக்குடியரசுத்தலைவர் நன்குஅறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்ற நாள் முதல் மாநிலத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு மக்கள் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்பச் செயல்பட்டு வருகிறது"

**அரசின் கொள்கைகளுக்கு முரணாகச் செயல்படும் ஆளுநர்!**

"ஆனால், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வெளிப்படையாகத் தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கு முரணாகச் செயல்பட்டு, தமிழ்நாடு அரசும், சட்டமன்றமும் செய்து வரும் பணிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார். சட்டமுன்வடிவுகள் மற்றும் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் தேவையில்லாமல் காலதாமதம் செய்து வருகிறார்".

இதற்கு முன்பு நாகாலாந்து கவர்னராக ஆர்.என்.ரவி பொறுப்புவகித்தபோதும்அவரதுசெயல்பாடுகள்திருப்திகரமாக அமையவில்லை" எனக் கோடிட்டுக் காட்டியுள்ள முதலமைச்சர், உண்மையில் நாகாலாந்து ஆளுநர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்ட பிறகுதான் நாகாலாந்திற்கு ஒரு நிம்மதி ஏற்பட்டுள்ளதாக, நாகாலாந்து தேசியவாத ஜனநாயக முற்போக்குக் கட்சியின் (என்.டி.பி.பி) தலைவர் குறிப்பிட்டதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஆளுநராகப் பொறுப்பேற்றது முதல் – அரசுடன் கருத்தியல் மோதல்!**

சட்டத்தால் நிறுவப்பட்ட அரசாங்கத்தைக் கலந்தாலோ சிக்காமல், அதற்கு இணையாக, மாநில தலைமைச் செயலாளருக்கு உத்தரவுகளை ஆர்.என்.ரவி வழங்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் விவகாரங்களில்தலையிட்டதாகஎன்.டி.பி.பிதலைவர் சிங்வாங் கொன்யாக் தெரிவித்ததையும், ஆளுநரின் இத்தகைய செயலுக்குப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பரவலான கண்டனத்தைத் தெரிவித்ததையும் முதலமைச்சர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.இந்தப்பின்னணியில்தான்,ஆர்.என்.ரவி 2021 செப்டம்பரில் தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டதாகவும்,அவர்பொறுப்பேற்றதுமுதல், சட்டபூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசுடன் கருத்தியல் மற்றும் அரசியல் போரில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

**ஆளுநர் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்பதற்கான ஆதாரங்கள்!**

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் பல்வேறு நடவடிக்கைகள், அவர் ஆளுநர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்பதைப் புலப்படுத்துகிறது என்பதற்குபின்வரும்நிகழ்வுகளைமுதலமைச்சர்அவர்கள்தனதுகடிதத்தில்ஆதாரமாகச்சுட்டிக்காட்டியுள்ளார்.

**அ) சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் தேவையற்ற காலதாமதம்**

"தமிழ்நாடுசட்டமன்றம்பலமுக்கியமானசட்டமுன்வடிவுகளைஇயற்றிஅவற்றைஆளுநரின்ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. சட்டப்பேரவையில் நிறை வேற்றப்பட்டசட்டமுன்வடிவுகளுக்குஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் தேவையற்ற காலதாமதம் ஏற்படுத்தி வருவது வேதனைஅளிக்கிறது.இதுமாநிலத்தின்நிருவாகத்தில் தலையிடுவதற்கும், சட்டமன்றத்தின் அலுவல்களில் தலையிடுவதற்கும் ஒப்பானதாகும். ஆளுநரின் இத்தகைய செயல், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டஒருஅரசாங்கம்மக்களுக்குச்சேவைசெய்வதைத் தடுக்கிறது" என்றும், "இது அரசியலமைப்பிற்கு முரணானது என்றும்" முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அமைச்சரவை அல்லது சட்டமன்றத்தின் முடிவின் மீது, ஒரு ஆளுநர் மேல்முறையீட்டு அதிகாரியாக இருக்க முடியாது. சட்டமுன்வடிவின் நோக்கக் காரணம், தேவை மற்றும் சட்டமுன்வடிவின் அவசியம் குறித்து ஆளுநர் விசாரிக்க முடியாது. இது சட்டமுன்வடிவின் அவசியத்தை விரிவாக விவாதிக்கும் சட்டமன்றத்தின் முழு உரிமைக்கு உட்பட்டது".

"இந்தச்சூழ்நிலையில்,தமிழ்நாடுசட்டமன்றப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டசட்டமுன்வடிவுகள்தொடர்பாகஆளுநர் கோரிய அனைத்து விளக்கங்களையும்தமிழ்நாடு அரசு அளித்துள்ளது.சட்டமன்றத்தில்சட்டமுன்வடிவுநிறைவேற்றப்பட்டவுடன் அது மக்களின் விருப்பமாகக் கருதப்பட்டு, ஆளுநர் அரசியலமைப்பின்கட்டமைப்பிற்குள்செயல்படவேண்டும்". "சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு காலக்கெடு வகுக்கப்படவில்லை என்பதை ஆளுநர் தவறாகப் பயன்படுத்தக் கூடாது" என்றும், "இப்படிப்பட்ட உயர் பதவிகளில் இதுபோன்ற செயல்கள் நடக்கும் என்று அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்".

**ஆ) குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்குவதில் தேவையற்ற தாமதம்!**

"ஊழல் புரிந்த முன்னாள் அ.தி.மு.க., அமைச்சர்கள் மீதுவழக்குத்தொடரஅனுமதிவழங்குவதுதொடர்பான கோப்புகளை ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டுள்ளார். சென்னை உயர்'நீதிமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட குட்கா வழக்கில் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது வழக்குத் தொடர சி.பி.ஐ. கோரிய அனுமதியைக்கூட வழங்காமல், ஆளுநர் கிடப்பில் போட்டுவைத்திருப்பது விசித்திரமாக உள்ளது" என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், ஆளுநரின் ஒப்புதலுக்காக ஊழல் வழக்குகள் தொடர்பான பின்வரும் கோப்புகள் நிலுவையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

- திரு.பி.வி.ரமணா @ பி.வெங்கட்ரமணா முன்னாள் பால்வளத் துறை அமைச்சர் – கோப்பு எண் AC/495/2022, நாள் 12.9.2022.
- டாக்டர் சி. விஜயபாஸ்கர், முன்னாள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் – கோப்பு எண் AC/495/2022, நாள் 12.9.2022.
- கே.சி.வீரமணி, முன்னாள்வணிகவரிமற்றும் பதிவுத்துறை அமைச்சர் – கோப்பு எண் AC/454/2021, நாள் 12.9.2022.
- எம்.ஆர்.விஜயபாஸ்கர், முன்னாள் போக்குவரத்துத்துறைஅமைச்சர்–கோப்புஎண்AC/351/2021, நாள் 15.5.2023.

**இ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அரசியல் மற்றும் கருத்தியல் எதிராளியாகச் செயல்படுதல்**

"ஆர்.என்.ரவி தனிப்பட்ட முறையில், தனது அரசியல் மற்றும் மதக் கருத்துகளைத் தொடர்ந்து பொது வெளியில் தெரிவித்து வருவது, அவர் வகிக்கும் ஆளுநர் பதவிக்கு மிகவும் பொருத்தமற்றது; ஒரு மாநில ஆளுநராக அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சங்கடத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது அவமதிப்பு, வெறுப்பு, அதிருப்தி மற்றும் தவறான எண்ணத்தைத் தூண்ட முயல்கிறார்".

> அரசியல் சாசனத்தின் மீதும், அது பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கைகள் மீதும் ஆளுநருக்கு முழு நம்பிக்கை இருக்க வேண்டும் என்றுதெரிவித்துள்ளமுதலமைச்சர்,அரசியலமைப்பின் இலட்சியங்கள் முகவுரையில் தொகுக்கப்பட்டுள்ளன என்றும், இந்தியா ஒரு இறையாண்மை மிக்க, சோசலிச, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு நாடு என்றும், இந்த அடிப்படைக் கொள்கைகளில் ஏதேனும் ஒன்றில் நம்பிக்கை இல்லாத ஆளுநர், அரசியலமைப்புப் பதவியை வகிக்கத்தகுதியற்றவர்.

"அமைதியாகவும், நல்லிணக்கத்துடனும் வாழும் பல்வேறு மதங்கள், மொழிகள், இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு தமிழ்நாடு சொர்க்கம் போன்றது" என்றும், மதச்சார்பற்றகொள்கைகள்மற்றும்பாலினச்சமத்துவம் ஆகியவற்றில் மாநில அரசு முழு நம்பிக்கை கொண்டுள்ளது"என்றும்குறிப்பிட்டுள்ளமுதலமைச்சர்,கெடுவாய்ப்பாக, ஆர்.என்.ரவி, இந்த நாட்டின் மதச்சார்பற்ற கொள்கைகளில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை அடிக்கடி தனது பிளவுபடுத்தும் பேச்சுகளின் மூலம் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகிறார்.

**இந்திய அரசியலமைப்பை அவமதிக்கும் ஆளுநரின் செயல்!**

ஆர்.என்.ரவி, விரும்பத்தகாத, பிளவுபடுத்தும், மத ரீதியானகருத்துக்களைப்பொதுவெளியில்பரப்பிவருவது, அவரது ஆளுநர் பதவிக்குப் பொருத்தமற்றது என்றுதெரிவித்துள்ளமுதலமைச்சர்,9.11.2022அன்று ஆர்.என்.ரவி, "உலகின் பிற பகுதிகளைப் போலவே இந்தியாவும் ஒற்றை மதத்தைச் சார்ந்துள்ளது" என்று ஒரு கருத்தை வெளியிட்டுள்ளது; இந்திய அரசியலமைப்பை அவமதிக்கும் செயலாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, அதன் அரசியலமைப்பு மற்றும் சட்டங்களைச்சார்ந்துள்ளதையும்,எந்தமதத்தையும்சார்ந்ததல்ல என்பதையும் இந்தியக் குடியரசுத் தலைவர் நன்கு அறிவார்கள்;இந்தியாவின்வலிமையும்,அழகும்,அதன் பன்முகக் கலாச்சாரங்களைக் கொண்ட சமூகத்திலும், பல நூற்றாண்டுகளாகக்கட்டமைக்கப்பட்ட மதநல்லிணக்கத்திலும் உள்ளது".

"13.06.2022 அன்று ஆர்.என்.ரவி, சனாதன தர்மத்தைப் புகழ்வது, தமிழ் இலக்கியத்தின் ரத்தினமான 'திருக்குறளை' வகுப்புவாதப்படுத்துவது, திராவிடப் பாரம்பரியத்தையும் தமிழ்ப் பெருமையையும் கண்டிப்பது போன்ற வகுப்புவாதக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இதுபோன்ற தேவையற்ற அறிக்கைகள், பேச்சுக்களின் மூலமாக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ் மக்களின் உணர்வையும்,பெருமையையும்புண்படுத்தியுள்ளார்".

"தமிழ்நாட்டுமக்களுக்குஎதுநல்லதுஎன்பதைமுடிவு செய்ய ஆர்.என்.ரவி தமிழ்நாட்டில் எந்தத்தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெறவில்லை என்பதை அவர் மறந்துவிட்டார்".

அவர்மக்களின்தலைவர்அல்ல;நியமனம்செய்யப்பட்ட ஒரு நிருவாகி" என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், 5.1.2023 அன்று நடைபெற்ற "காசி தமிழ்ச் சங்கமம்" என்றவிழாவில், மீண்டும்தமிழ்மக்களையும், பண்பாட்டையும்,இலக்கியத்தையும்,திராவிடக்கருத்தியலையும், அரசியலையும் இழிவுபடுத்தும் வகையிலும்,அவதூறாகவும்அறிக்கைகளைவெளியிட்டார். அவை பின்வருமாறு செய்தித்தாளில் வெளிவந்தன" என்றும் குறிப்பிட் டுள்ளார்.

- "துரதிர்ஷ்டவசமாக தமிழ்நாட்டில், நாங்கள் திராவிடர்கள், எங்களுக்கும் இதற்கும் (பாரதம்) எந்தத் தொடர்பும் இல்லை என்ற பிற்போக்குத்தனமான அரசியல் நடந்து வருகிறது ".
- "அதனால்தான்கூட்டாட்சிபற்றிவெளிப்படையாகப் பேசுகிறார்கள். மாநிலங்கள் உருவாக்கப்படுவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாரதம் இங்கே இருந்தது என்பதை உணரவில்லை".
- "மாகாணங்கள் என்ற கருத்தாக்கம் நிருவாக நோக்கங்களுக்காக உள்ளது, எனவே, நமது ஒன்றியம் அமெரிக்காவைப் போலன்றி இயற்கையானது; கருத்தியல்சார்ந்தது அல்லஎன்பதைநாம்உணரவேண்டும்"
- "இங்கே தமிழ்நாட்டில் ஒரு வித்தியாசமான கதையாடல் உருவாக்கப்பட்டுள்ளது; நாடு முழுமைக்கும் பொருந்தும் அனைத்தையும் தமிழ்நாடு மட்டும், 'இல்லை, நாங்கள் உடன்படவில்லை' என்று சொல்லும்.இது ஒருபழக்கமாகிவிட்டது,கல்விப்புலம்உட்பட அனைத்துத் தரப்பினராலும் இந்தப் பழக்கம் வலுப்படுத்தப்பட்டுள்ளது".
- "மிகவும் மோசமான இலக்கியங்கள் உருவாக்கப் பட்டு, மக்களுக்குப் போதிக்கப்பட்டுள்ளன. இது உடைக்கப்பட வேண்டும், உண்மை வெல்ல வேண்டும். நாம் அனைவரும் ஒன்று, பாரதத்தின் ஓர் அங்கம் என்பதே அந்த உண்மை".

"திராவிடஅரசியல்பிற்போக்குத்தனமானது" என்று ஆர்.என்.ரவிகூறியிருப்பது அவதூறானது மட்டுமல்ல; அது அறியாமையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுமாகும் – என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், "50 ஆண்டுகளுக்கும் மேலான திராவிட அரசு மற்றும் அரசியலின் விளைவாகவே, இன்றைக்கு வளர்ச்சியில் இந்திய அளவில் முதல் 3 இடங்களில் தமிழ்நாடு உள்ளது; வளர்ச்சியும், சமூகநீதியும் கைகோர்த்துச் செல்லும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின்பொருளாதார ஆலோசனைக்குழு வெளியிட்டுள்ள, 2022–ஆம் ஆண்டின் சமூக முன்னேற்றக் குறியீட்டில், தேசிய சராசரியான 60.19க்கு எதிராக, தமிழ்நாடு63.33புள்ளிகளைப்பெற்றுள்ளதைக்கோடிட்டுக்காட்டியுள்ள முதலமைச்சர், திராவிட அரசியல் பிற்போக்கானதா அல்லது முற்போக்கானதா என்பதை நடுநிலையாளர்களால் இந்தத் தரவுகளைக் கொண்டு கணிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**மின்னணு ஏற்றுமதியில் – நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம்!**

"தமிழ்நாட்டில், தொடர்ந்து திராவிட ஆட்சி நடப்பதால்தான்பொருளாதாரவளர்ச்சியிலும்,மேம்பாட்டிலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது; அதிக தொழிற்சாலைகள் உள்ள மாநிலங்கள் குறித்த புள்ளிவிவரத்தில், தமிழ்நாடு 38,837 தொழிற்சாலைகளுடன் முதலிடத்திலும், குஜராத் மாநிலம் 28,479 தொழிற்சாலைகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளது" என முதலமைச்சர்சுட்டிக்காட்டியுள்ளதோடு, "2020–2021ஆம் ஆண்டில், ரூ.13,641 கோடியாக இருந்த மின்னணு ஏற்றுமதி, கடந்த 2 ஆண்டுகளில் 223விழுக்காடு அளவிற்குவளர்ச்சியைப்பதிவுசெய்து, 2022–2023ஆம் ஆண்டில் ரூ.44,044 கோடியாக உயர்ந்து, தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது".

"எனவே,தமிழ்நாட்டில்திராவிடஅரசியல்பிற்போக்குத்தனமானது என்று சொல்பவர்களின் பார்வையில்தான் குறைபாடு இருக்கிறது" என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், ஆளுநர் என்ற அரசியலமைப்புப் பதவியை வகிக்கும் ஒரு நபரின் பொருத்தமற்ற அரசியல் போக்கையே இது அம்பலப்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளுநரின் எதேச்சாதிகாரம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது!

"அரசியல்சாசனத்தின்அடிப்படைக்கட்டமைப்பின் முக்கிய அங்கமான கூட்டாட்சித் தத்துவம், நிருவாக நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது என ஆளுநர் ஆர்.என். ரவி விமர்சித்து, அவதூறாகப் பேசியிருப்பதுதான் அதைவிட அதிர்ச்சியளிக்கும் விஷயம்" என்று தெரிவித்துள்ள முதலமைச்சர், கூட்டாட்சி என்பது நிர்வாக நோக்கங்களுக்காக உருவாக்கப்படவில்லை; மாறாக அரசியலமைப்பின்கீழ் இந்தியா இவ்வாறாக அமைக்கப்பட்டுள்ளது.இந்தியஅரசியலமைப்புச்சட்டம்பிரிவு 1இல் இந்தியாவை "மாநிலங்களின் ஒன்றியம்" என்று வரையறுக்கிறது; இதன் மூலம் மாநிலங்கள் ஒன்றிணைந்து ஒன்றியத்தை உருவாக்குகின்றன" எனவும் குறிப்பிட்டுள்ள்ளார்.

ஆளுநர்ஆர்.என்.ரவி, "இலக்கியம்மக்களுக்குமோசமாகப் போதிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்து தமிழ் இலக்கியத்தை இழிவுபடுத்தியுள்ளதையும், இது போன்ற அவரது அறிக்கைகள்அரசியலமைப்பை அவமதிக்கும்வகையில்உள்ளதையும்,அவரதுஇதுபோன்ற செயல்கள், இந்திய அரசமைப்பின் 156 (1)ஆவது பிரிவின்கீழ், அரசியலமைப்பை நிலைநிறுத்துவ தற்கும், இணங்குவதற்கும் தான் ஏற்றுக்'கொண்ட உறுதிமொழியை மீறியுள்ளதையே காட்டுகிறது.

> **ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் அவமதிக்கும் செயல்!**
>
> "'தந்தை பெரியார்', 'அம்பேத்கர்', 'பெருந்தலைவர் காமராஜர்', 'பேரறிஞர் அண்ணா', 'முத்தமிழறிஞர் கலைஞர்' போன்றதலைவர்களின்பெயர்களைக் குறிப்பிடுவதையும்ஆளுநர்தவிர்த்தார்;இதன்மூலம், மாநிலத்தின்மற்றும்அரசாங்கத்தின்நெறிமுறைகளை ஆளுநர் பகிரங்கமாக கேள்விக் குள்ளாக்கினார். இந்தியாவின் இத்தகைய மகத்தான தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட அவர் மறுத்தது, தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல; ஒட்டு மொத்த நாட்டையும் அவமதிக்கும் செயலாகும்".

மேற்கூறியவற்றைத் தவிர, ஆர்.என்.ரவி, தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் "தமிழ்நாடு" என்ற பெயரை, "தமிழகம்" என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று ஏற்கவியலாத அதிர்ச்சியை அளிக்கும் கருத்தைத் தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர்,

**ஆளுநர் ரவி; தமிழர்களின் நலனுக்கு எதிரானவர்!**

ஆளுநர்அவர்களின்இந்தச்செயல்தமிழ்நாட்டின்மீது அவருக்குள்ள அதீத வெறுப்பையும் காட்டுவதாக அமைந்துள்ளதோடு, திராவிடத்தின் அடையாளமும், முன்னாள்முதலமைச்சரும்,தி.மு.க.மற்றும்அ.தி.மு.க. ஆகியஇருகட்சிகளின்அடையாளமாகத்திகழ்பவருமான பேரறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ்நாடு' எனச் சூட்டப்பட்ட பெயரைக் களங்கப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள முதலமைச்சர், "ஆர்.என்.ரவி,தமிழர்களின்நலனுக்குஎதிரானவர்என்பதும், அவர் அறிந்த வகையில், தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழர் பண்பாடு ஆகியவற்றின் மீது விவரிக்க முடியாத, ஆழமாகவேரூன்றியபகைமைகொண்டவர் என்பதும் தெளிவாகிறது".

**"ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் மேலே விவரிக்கப்பட்ட சொற்களும், பேச்சுகளும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டஅரசாங்கத்தைச்செயல்படவிடாமல்தடுப்பது மட்டுமல்லாமல், சட்டத்தால் நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது வெறுப்பு, அவமதிப்பு மற்றும் அதிருப்தியையும் அவர் தூண்டுகிறார் என்பதையே காட்டுகிறது".**

"9.1.2023அன்று,தமிழ்நாடுசட்டமன்றத்தில்ஆளுநர் உரை நிகழ்த்தியபோது ஆர்.என்.ரவி அவர்களின் எதேச்சாதிகாரம்உச்சக்கட்டத்தைஅடைந்தது". "பிரிவு 163(1)இன் படி, ஆளுநர் என்பவர் அமைச்சரவையின் வழிகாட்டுதல்மற்றும்அறிவுரையின்படிதனதுகடமைகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆளுநர் தன்னிச்சையாகவோ, தனது அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவோ செயல்பட முடியாது.

இருப்பினும், 9.1.2023 அன்று, ஆர்.என்.ரவி', அரசியல மைப்புச் சட்டத்தின்கீழ், தான் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை முற்றிலுமாக மீறும் வகையில், தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டு, 7.1.2023 அன்று தான் ஒப்புதல்அளித்தஉரைப்பகுதியைவாசிக்காமல்,திருத்தப்பட்ட பதிப்பை வாசித்ததையும், அவருடைய அன்றைய உரையில்அவருடைய அரசியல் நோக்கம் தெளிவாகத்தெரிந்ததையும்குறிப்பிட்டுள்ள முதலமைச்சர்,

"வரைவு உரையில் குறிப்பிடப்பட்டிருந்த, 'சமூகநீதி', 'சுயமரியாதை', 'அனைவருக்குமான வளர்ச்சி', 'சமத்துவம்', 'பெண்ணுரிமை', 'மதநல்லிணக்கம்', 'மனிதநேயம்' மற்றும் 'திராவிடமாடல்ஆட்சி' போன்ற சொற்களை அவர் வாசிக்காமல் புறக்கணித்தார்; ஒருவேளை இவற்றில் எல்லாம் ஆளுநருக்கு நம்பிக்கை இல்லைஎன்பதால்,அவர்அவற்றைப்புறக்கணித்திருக்கலாம்" என்று தெரிவித்துள்ளார்.

**ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் அவமதிக்கும் செயல்!**

"அதோடு, 'தந்தைபெரியார்', 'அம்பேத்கர்', 'பெருந்தலைவர் காமராஜர்', 'பேரறிஞர் அண்ணா', 'முத்தமிழறிஞர் கலைஞர்' போன்ற தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதையும் ஆளுநர் தவிர்த்தார்; இதன் மூலம், மாநிலத்தின் மற்றும் அரசாங்கத்தின் நெறிமுறைகளைஆளுநர்பகிரங்கமாககேள்விக்குள்ளாக்கினார். இந்தியாவின் இத்தகைய மகத்தான தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட அவர் மறுத்தது, தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல; ஒட்டுமொத்த நாட்டையும் அவமதிக்கும் செயலாகும்".

அதோடு, ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட வரைவுஉரைக்குஆளுநர் ஒப்புதல்அளித்தநிலையில் கூட,இதுபோன்றவாக்கியங்களைப்படிக்காமல்தவிர்த்தது அதிர்ச்சியளிக்கிறது.

இது ஒருபுறமிருக்க, பொதுவெளியில் அவர் தெரிவிக்கும் கருத்துகள் அவர் வகிக்கும் பதவிக்கு ஏற்றதாக இல்லை. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டை மேம்படுத்தவும்,தமிழ்நாட்டின்வளர்ச்சிக்காக முதலீடுகளை ஈர்க்கவும் கிழக்காசிய நாடுகளுக்கு தான் மாநிலத்திற்கு மிகுந்த பயனளிக்கக்கூடிய பயணம் மேற்கொண்டிருந்தபோது, ஆளுநர் ஆர்.என்.ரவி, "வெளிநாட்டுப் பயணங்களால் முதலீடுகள் வருவதில்லை" என்று சீண்டுவதுபோல குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், "ஆர்.என்.ரவி, அரசியலமைப்புச் சட்டத்தால் நியமிக்கப் பட்ட கண்ணியமான ஆளுநராகச் செயல்படுவதை விட, மலிவான அரசியலில் அதிக ஆர்வம்கொண்டவர்என்பதுதெளிவாகியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஈ) குற்றவாளிகளை ஆதரித்தல் மற்றும் காவல்துறை விசாரணையில் தலையிடுதல்**

இவை தவிர, கிரிமினல் குற்றங்கள் குறித்து ஆளுநர் ஆர்.என்.ரவி ஆதாரமற்ற மற்றும் தவறான அறிக்கைகளை வெளியிட்டு வருவதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் , "2022–ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடையில், சிதம்பரம் நடராஜர்கோயிலைச்சார்ந்தஇரண்டுதீட்சிதர்கள்,குழந்தைத் திருமணப் புகார்களைத் தொடர்ந்து சிதம்பரம் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்;

ஆதாரங்களின்அடிப்படையில்,இந்தியதண்டனைச் சட்டம் பிரிவு 366 (ஏ) மற்றும் குழந்தைத் திருமண தடுப்புச்சட்டம்,2006இன்கீழ்நான்குவழக்குகள்காவல் துறையினரால்பதிவுசெய்யப்பட்டன;இதுதொடர்பாக 8 ஆண்கள், 3 பெண்களை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மே 4–ஆம் தேதி, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளிதழுக்குப் பேட்டியளித்த ஆளுநர் ஆர்.என்.ரவி, சிதம்பரத்தில் குழந்தைத் திருமணம் நடைபெறவில்லைஎன்றும்,பழிவாங்கும்நோக்கில்நடராஜர் கோயில் தீட்சிதர்கள்மீது மாநில அரசின் சமூக நலத்துறை 8 பொய்யான புகார்களைப் பதிவு செய்துள்ளதாகவும்கூறியிருந்ததைச்சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர்,மாநிலத்தின்முக்கியப்பொறுப்பில்உள்ளஆளுநரின் இத்தகைய அறிக்கை, விசாரணையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், காவல்துறையினரின் நியாயமானவிசாரணைக்கு இடையூறாக இருந்தது என்றும், இது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

"பின்னர், சிறுமிகளின் திருமணம் தொடர்பான

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்